வெளியீடு 6-9-2002 Issued 6-9-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 28, 2002-தொகுதி 16-எண் 2

**Thursday the 28th March, 2002 - Volume 16- No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

[Price Rs. 3.00

36/2003

**28-03-2002**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு 59-60

2. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 61-82

3. அறிவிப்புகள்—

(அ) மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு ஆளுநர் மகிழ்ச்சி தெரிவித்தல் 83

(ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆசெ.) 92

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) 96

(ஈ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, மொழிதல் (ஆசெ.) 97

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) 101

| | பக்கங்கள் |
|---|---|
| *4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, **2001-2002**, அளித்தல்* | 83-88 |
| *5. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், **1990-91**, அளித்தல்* | 88-91 |
| *6. முன்பண மானியக் கோரிக்கைகள், **2002-2003**, வாக்கெடுப்பு* | 92-95 |
| *7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—* | |
| *(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2002* | 96-97 |
| *(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2002* | 102 |
| *8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், **2001-2002**, வாக்கெடுப்பு—* | 97-101 |
| *9. அரசினர் தீர்மானம்—* | |
| *விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்* | 102-103 |
| *10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—* | |
| *(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2002* | 103-105 |
| *(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2002* | 105-107 |
| *11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—* | 107-109 |


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223758
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 14, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 மார்ச் 28, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு"*

*நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறர்க்குப் பயன்பட பணியாற்றுபவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரங்கல் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கே.ஆர். ராஜு அவர்கள் 24-3-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. கே. ஆர். ராஜு அவர்கள் 1991-1996 ஆகிய ஆண்டுகளில் கடலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2002 மார்ச் 28

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 31. திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**31—**

### மாணவர்களுக்குப் பயிற்சி

***5334—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:***

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பள்ளி மாணவர்களுக்கு சாலைகளைத் தூய்மையாக வைக்கும் பயிற்சி அளிக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சுற்றுப்புறத் தூய்மையை வலியுறுத்தும் கருத்துகள் பாடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதோடு ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும்போது சாலைகளையும், பொது இடங்களையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்துகள் வலியுறுத்தப்படுகின்றன.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளிலும், மாநகராட்சிப் பள்ளிகளிலும் இத்தகைய பயிற்சி இப்போது கொடுக்கப்படுகின்றதா? பயிற்சி என்றால் எத்தகைய பயிற்சி கொடுக்கப்படுகின்றது? தூய்மை மட்டுமல்லாமல், சாலை விதிகளைப் பற்றிய பயிற்சியும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றதா என்பதை அமைச்சர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளை எவ்வாறு தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுபற்றி கட்டாயமாக எந்தப் பயிற்சியும் தருவதில்லை. ஆனால், N.S.S., Scout போன்றவற்றின் மூலமாக சில பயிற்சிகள் ஆங்காங்கே சில நாட்கள் நடைபெறுகின்றன. அதில் சாலைகளை எவ்வாறு



2002 மார்ச் 28]

பாதுகாக்க வேண்டும், சாலை விதிமுறைகளை எவ்வாறு பின்பற்றவேண்டும் என்பது பற்றி மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அது ஒரு கட்டாயப் பயிற்சியாக கிடையாது. அது N.S.S., Scout போன்றவற்றின் மூலமாக நடைபெறுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே N.S.S., Scout மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதாக இங்கே சொன்னார்கள். ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கு நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபடாமல் இருப்பது மிக முக்கியமானது என்ற காரணத்தினாலே, அப்படிப்பட்ட பயிற்சிகளை N.S.S., Scout மாணவர்களுக்குக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதேநேரத்திலே இந்த நாட்டை எதிர்காலத்திலே உருவாக்கக்கூடியவர்கள் மாணவர்கள்தான். இந்த நாடு மாணவர்களை எதிர்நோக்கியிருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் எதிர்காலத்திலே ஒழுக்கம் உள்ளவர்களாக, நல்லவர்களாக வளர வேண்டும், நாட்டுப் பற்று உடையவர்களாக வளர வேண்டும்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்று வள்ளுவர் சொல்வாரே, அதைப்போல மாணவர்கள் நல்லவர்களாக வளர்வதற்குப் பயிற்சி கொடுக்கக்கூடிய வகையிலே மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒரு பாடப் பிரிவிலாவது நீதி போதனை வகுப்பு, Moral class என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே, அப்படிப்பட்ட வகுப்பினை ஒதுக்கி பயிற்சி கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது நல்ல கருத்துதான். ஏனென்றால் மாணவர்கள்தான், மாணவிகள்தான் எதிர்காலத்தினுடைய சந்ததியினர். அவர்கள் நல்லதொரு கல்வி பெற்று, ஒழுக்கம் உள்ளவர்களாக இருந்தால்தான், நாட்டினுடைய வளர்ச்சியும் நன்றாக இருக்கும் என்பதில் ஐயப்பாடு கிடையாது. இதையெல்லாம் வலியுறுத்தும் வகையில்—பாடத்திட்டத்தில் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. — ஆசிரியர்கள் பாடம் சொல்லித் தரும்போது அந்த நல்ல கருத்துகளையெல்லாம் மாணவர்களுக்குச் சொல்லித் தருகின்றனர். இதற்காகத் தனியாக ஒரு வகுப்பு வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

[2002 மார்ச் 28

பாடத் திட்டத்தை வகுக்கின்றபோது, அப்பாடத் திட்டத்தை வகுக்கின்றவர்கள், அந்த நேரத்தில், இந்தக் கருத்துகள் ஏதாவது இடம் பெறமுடியுமா அல்லது தனியாக அதற்கு ஒரு தனி வகுப்பு வைக்க முடியுமா என்ற கருத்தை ஏற்றுச் செயல்படுவார்கள் என்று கருதுகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்கள் பயிற்சி பெறுகின்ற விதத்தில் யோகா பயிற்சியை அரசு பாடத்திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** இப்போது சாலையை எவ்வாறு தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கேள்விதான் கேட்கப்பட்டது. யோகா பற்றியும் சொல்லுகின்றார். இதில் கராத்தேயும் வரும். இவையெல்லாம் தேவையாக இருந்தாலுங்கூட தனிக் கேள்வியாகக் கேட்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**32—**

### மகளிர் கல்லூரி

***7655—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 மார்ச் 28]

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளாத்திகுளம் தொகுதி மிகவும் பின்தங்கிய, வானம் பார்த்த, விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் உள்ள தொகுதி. ஆகவே, அங்கே மகளிர் உயர் கல்வியைப் பெறவேண்டுமென்றால் அருப்புக்கோட்டை, சிவகாசி, தூத்துக்குடி போன்ற பெருநகரங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு அடுத்த ஆண்டில் சேர்த்துக்கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து நிதிநிலைக்கு ஏற்றவாறு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**33—**

### சட்டக் கல்லூரி

***854—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் நடப்பாண்டில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படுமா?

(ஆ) அதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே வேலூரில் புதிதாக ஒரு சட்டக் கல்லூரி தொடங்க உள்ளது என்று ஏற்கெனவே மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. சட்டக் கல்வித் துறை என்கிற தலைப்பின்கீழ், சட்டக் கல்வித் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. வேலூரில் புதிதாக ஒரு

[2002 மார்ச் 28

சட்டக் கல்லூரி தொடங்கப்பட உள்ளது என்று ஏற்கெனவே அரசு அறிவித்த ஒன்றை, இப்போது வினாவே எழவில்லை என்று அமைச்சர் கூறுவது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி இந்தத் துறை அமைச்சருக்கு ஒரு தவறான தகவலைத் தந்து, ஒரு தவறான தகவலை அவைக்குத் தருவதோடு மட்டுமல்லாமல் பெரிய குழப்பத்தையே உருவாக்குவதுபோல் இது இருக்கிறது. வேலூர் மக்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த சட்டக் கல்லூரி வரும், வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். 2000 ஆம் ஆண்டில், அதற்கான இடத்தைக்கூட கலெக்டர் 5 இடங்களிலே வாடகைக்கு பார்த்து சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுத்தார்கள். ஆனால் அரசாணை பிறப்பிக்கக்கூடிய கால கட்டத்தில் அந்த அரசு முடிந்து வேறு ஓர் அரசு அமைந்திருக்கிறது. அந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்கெனவே எடுத்த அந்தக் கொள்கை முடிவை இந்த அரசும் தொடர்ந்து செய்து, அந்த இடத்திலே சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? தவறு செய்த அந்தத் துறை அதிகாரிகள்மீது அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இதுபற்றி ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ** (குறுக்கீடு) அறிவிப்பு கொடுத்தார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், கேள்விக்கான பதில் மட்டும் போதும், மற்றவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வேலூரிலே சட்டக் கல்லூரி வரும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே அவர்கள் சொன்னது 2000 ஆம் ஆண்டு. அப்போது யாருடைய ஆட்சி நடைபெற்றது என்பது நிச்சயமாகத் தெரியும். ஆனால் இப்போதுள்ள நிதிச் சூழ்நிலையில் ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றால் தொடர் செலவினம் 16 இலட்சம், தொடராச் செலவினம் 10 இலட்சம் ஆகும். எனவே இப்போது இருக்கின்ற நிதிச் சுமையைக் கருத்தில்கொண்டு இப்போது வினா எழவில்லை என்றுதான் சொன்னேனேயொழிய, எப்போதும் இல்லை என்று சொல்லவில்லை. நிதிச்சுமை சீரடைந்தவுடன் இதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடரும், தொடராச்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மார்ச் 28]

செலவினங்களுக்கு 26 இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது; ஆகவே இந்த ஆண்டு இல்லை என்ற முறையிலே அவைக்கு இப்போது தகவல் தந்திருக்கிறார்கள். அமைச்சர் வேண்டுமென்று சொன்னால் — என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியைக்கூட, அப்படியே இந்த 26 இலட்சத்தை நான் கொடுக்கிறேன். நடப்பு ஆண்டிலே இந்த சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் செலவினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் 16 இலட்ச ரூபாய்; ஆயுள் முழுவதும் ஞானசேகரன் கொடுப்பாரானால் அதுபற்றி யோசிக்கலாம்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. என். நன்மாறன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, சட்டக் கல்லூரி வேலூரோடு முடியட்டும்.

**34—**

## மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்

***1118—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் தூர்வாரி நிரந்தரமாகத் தண்ணீர் மற்றும் படகு விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான மதுரை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி திருக்கோயிலுக்கு அருகிலுள்ள

தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தண்ணீர் நிரப்புதல் மற்றும் படகு விடுதல் குறித்து 24-1-1992-ல் சென்னை முதன்மை நிலை நீர் ஆய்வாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்கள் கடித அறிக்கையின்படி தெப்பக்குளத்தை ஆய்வு செய்ததில் மேற்படி தெப்பக்குளத்தில் 15 மீட்டர் ஆழத்திற்குக்கீழ் பாறையாக இருப்பதால், தெப்பக்குளத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தால் தண்ணீர் கிடைப்பது அரிது என்று ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தெப்பக்குளத்தில் நிரப்பப்படும் நீர் நிலைத்து நிற்பதில்லை. எனவே, நிரந்தரமாக நீர் நிற்காத நிலையில், படகு விடும் சூழ்நிலை இல்லை.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெப்பக்குளத்தைப்பற்றி அறிந்த மன்ற உறுப்பினர்கள் ஏராளமாக இருக்கிற அவை இது. தலைவரே அதற்கு எதிர்த்தாற்போல்தான் படித்துக் கொண்டிருந்தார். என்னுடைய சிறு வயதிலும் சரி, இங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் திரு. ஓ.பி.எஸ். அவர்களும் அண்ணன் திரு. துரைராஜ் அவர்களும், மற்ற அனைவருமே பார்த்த இடம். அந்தக் காலத்திலே எப்படியோ நடந்திருக்கிறது. மீண்டும் அது நடப்பதற்கு ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாநகர ஆணையாளர் அவர்களும் கடிதப் போக்குவரத்தை நடத்திக் கொண்டேயிருக்கிறார்கள். அதிலே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் தலையிட்டு ஒரு சுமூக முடிவு கண்டால் தண்ணீர் நிரப்பி படகு விடுவதற்கு வாய்ப்பு உண்டு என்பதைச் சொல்லி, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான, மதுரை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான, மேற்படி திருக்கோயிலுக்கு அருகிலுள்ள தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தண்ணீர் நிரப்புதல் மற்றும் படகு விடுதல் குறித்து 24-1-1992-ல் சென்னை முதன்மை நிலை நீர் ஆய்வாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்கள் கடித அறிக்கையின்படி தெப்பக் குளத்தை ஆய்வு செய்ததில், மேற்படி தெப்பக் குளத்தில் 15 மீட்டர் ஆழத்திற்குக்கீழ் பாறையாக இருப்பதால், தெப்பக்குளத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தால் தண்ணீர் கிடைப்பது அரிது என்று ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. மேலும், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர், மதுரை—வைகை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஆய்வு





செய்தபோது வைகை நதி மட்டுமல்லாமல் மதுரை மாநகரின் கலை, பாரம்பரியம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, மரபு உரிமை வாய்ந்த நகரத் திட்டம் என்ற திட்டத்தின்படி 150 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்வதாக அறிக்கை வெளியிட்டார். இந்த நிலையில் 16-10-2001 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் 20-10-2000 அன்று மதுரை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் நடத்திய கூட்டங்களில் தெப்பக்குளத்தில் நிரந்தரமாக நீர் நிரப்புவது குறித்து, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் விரிவாக எடுத்துரைத்ததன் பேரில் பொதுப் பணித் துறை அலுவலர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தண்ணீர் நிரப்புதல் சம்பந்தமாக வைகை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கலை பாரம்பரியம் பாதுகாத்தல் திட்டத்தில் மேம்பாட்டு வேலைகள் குறித்த திட்ட அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அது நீங்கள் பார்த்த இடம்தான். பல ஆண்டுகளுக்கு முன்னாலே அதிலே ஆண்டு பூராவும் தண்ணீர் நிரப்பப்பட்டு அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளெல்லாம் படகுகளிலே உல்லாசமாக சென்று மைய மண்டபத்திலே அமர்ந்து விட்டு வருகின்ற ஒரு நல்ல சுற்றுலாத் தலம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோதுகூட அங்கே 15 மீட்டருக்குக் கீழே பாறை இருக்கிறது என்று சொல்லி, அப்படி இருக்கின்ற காரணத்தினால் அதிலே நிரப்பப்படுகின்ற தண்ணீர் ஓரளவுக்கு பாறைக்குக் கீழே இறங்க முடியாது என்று சொன்னார்கள். அந்த 15 மீட்டர் ஆழத்திற்கு இறங்கிய பின்பு நிலைக்கின்ற ஒரு நிலை ஏற்படும். ஆகையினாலே, வைகையிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து அதை நிரப்புவதற்கு, இந்த ஆண்டே அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் தெப்பக்குளத்தில் நிரந்தரமாகத் தண்ணீர் நிரப்பும் திட்டம் இல்லை. எனினும், ஒவ்வோர் ஆண்டும் தை மாதம் தெப்ப உற்சவத்திற்கு வைகை ஆற்றிலிருந்து விசைக் குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவந்து நிரப்பப்பட்டு தெப்ப உற்சவம் நடந்துகொண்டு வருகிறது.

[2002 மார்ச் 28

நீர்மட்டம் மிகவும் கீழே சென்றுவிட்ட நிலையில் மேற்படி தெப்பக் குளத்தில் நிரப்பப்படும் நீர் நிலைத்து நிற்பது இல்லை. எனவே, நிரந்தரமாக நீர் நிற்காத நிலையில் படகு விடும் சூழ்நிலை தற்சமயம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

*முற்பகல் 10-15*

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் இருக்கிற மீனாட்சி அம்மன் கோயில், அடுத்தபடியாக மாரியம்மன் தெப்பக்குளம் ஆகியவைபற்றி அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு நேரடியாகவே வைகையிலிருந்து தண்ணீர் வருகிற வாய்ப்பு இருந்தது. அது ஆக்கிரமிப்பின் காரணமாக தடைப்பட்டுப் போய்விட்டது. அமைச்சர் குறிப்பிட்டதுபோல தெப்பத் திருவிழாவிற்கு மட்டும் எங்கிருந்தாவது தண்ணீர் நிரப்பி விட்டு அந்த தெப்பத் தேரை ஓட்டிவிட்டு முடித்து விட்டு அப்படியே விட்டு விடுகிறார்கள். மற்ற நேரம் எல்லாம் அது பந்து விளையாடுகிற இடமாக மாறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கீழே பாறை இருக்கிற காரணத்தினாலே விரைவாக தண்ணீர் வற்றக்கூடிய வாய்ப்பு இல்லை. ஏற்கெனவே நேரடியாக வைகையிலேயிருந்து தண்ணீர் வருகிற வாய்ப்பு இருந்தது. அது தடைப்பட்டுப் போய் இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி நேரடியாகத் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா, அல்லது அது மிகமிக முக்கியமான ஒரு சுற்றுலாத் தலம் என்பதால், ஏதாவது ஒரு வகையிலே வருடம் முழுவதும் தண்ணீர் நிரப்புவதற்கான ஏற்பாடு செய்வதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மூலமாகவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும் மதுரை மாநகராட்சியினுடைய ஆணையரைக் கலந்தாலோசித்து அடுத்த ஆண்டில் இதற்கு நிரந்தரமாக வைகை ஆற்றிலேயிருந்து தண்ணீர் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



2002 மார்ச் 28]

**35—**

### கோயில் கோபுரம்

***7967—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் அருள்மிகு தாமோதரப் பெருமாள் கோயிலின் முன்புறக் கோபுரம் பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி ரூ. 11.50 இலட்சம் செலவில், இராஜகோபுர திருப்பணி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் அரசின் பங்கும் அடங்கும். திருப்பணிக் குழு அமைத்து, இராஜகோபுர திருப்பணிகள் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன், Shooting-க்குப் போய்விட்டாரா? (சிரிப்பு).

வினா எண் 36, திரு. ப. அரசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**36—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***5602—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 28

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவில் வட்டம், கரூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கரூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை. இருந்தாலும், 6,500 மக்கள் தொகை கொண்ட அந்தக் கிராமத்தில் தற்போது ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதன் அடிப்படையில் கரூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவில்லை என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதன் அடிப்படையில் அமைக்கப்படும் என்று கேளுங்கள்; அமைக்கப்படவில்லை என்று அல்ல.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கரூர் கிராமம் பொன்பேத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தின் எல்லைக்குட்பட்ட ஒரு சிறு குக்கிராமம். ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசினுடைய நிபந்தனையின்படி, மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற இலக்கின்படி 30,000 மக்கட்தொகை இருக்க வேண்டும். அதேபோல ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இன்னோர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோமீட்டருக்கு அதிகமாக இருக்க வேண்டும். எனவே, இந்த இலக்குகளை அடிப்படையாகக் கொண்டுதான் ஆங்காங்கே புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்தத் தகுதிகள் கரூர் கிராமத்திற்கு இல்லை. இருந்தாலும், பொன்பேத்தி ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக நல்ல தரமான மருத்துவ சேவையை அந்தப் பகுதி மக்களுக்கு அளிக்கும் நோக்கத்தோடு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த பொன்பேத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள், எக்ஸ்ரே வசதி, ஆப்பரேஷன் தியேட்டர், ஆம்புலன்ஸ் வசதி மற்றும் 5 டாக்டர்கள் பணிபுரிகிற வகையிலே அதைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டிற்குள் அந்த ஆரம்ப



2002 மார்ச் 28]

சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரிலிருந்து பொன்பேத்திக்கு 12 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. கரூர் என்பது ஓர் ஊர். அதற்கு அருகிலே பல கிராமங்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தால், இப்போது ஏறத்தாழ 30,000 மக்கள் அங்கே இருக்கிறார்கள். ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு அரசு விதித்திருந்த 10,000 ரூபாய் தொகையை அந்த கிராமத்து மக்கள் அரசிடம் செலுத்தியுள்ளார்கள். எனவே, மிக, மிக முக்கியமான அந்த ஊரில் உடனடியாக இந்த ஆண்டிலேயே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல கணக்கெடுத்துக்கொள்ள முடியாது. ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகை 72,954 தான். அந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே பொன்பேத்தி, மிமிசல் என்கிற ஊர்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மக்கள் தொகை அடிப்படை என்று பார்க்கிறபோது, 30,000 மக்கள் தொகை என்று கணக்குப் பார்க்கிறபோது, 90,000-க்கும் மேற்பட்டு இருந்தால்தான் மூன்றாவது ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கே அமைக்க முடியும். ஆனால், இருப்பதோ 72,954 பேர்கள்தான். எனவே, உறுப்பினர் சொல்வதைப்போல தூரம் இருந்தாலும், மக்கள் தொகை இங்கே ஒத்துவரவில்லை. எனவே, அதன் அடிப்படையில்தான் அங்கே ஆரம்பிக்கப்படவில்லை. இருந்தாலும் அந்த கரூர் மக்களுக்கு, பொன்பேத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதன் மூலம், அங்கே நல்ல தரமான மருத்துவ சிகிச்சை கிடைக்கும். அதைப்போல அந்த மக்களுக்கு ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனை மூலம் சுகாதார வசதியும் மருத்துவ வசதியும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டையும் பயன்படுத்தி அந்த மக்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். அங்கே மக்கள் தொகை உயர்கிற காலத்தில் அல்லது மக்கள் தொகை இலக்கை ஒருவேளை மத்திய அரசு குறைக்கிற காலத்திலே இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

[2002 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி—தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி சாலை விபத்துக்கள் நடைபெறுகின்றன. விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன், இது ஆவுடையார் கோவில் சம்பந்தப்பட்ட கேள்வி.

வினா எண் 37. திரு. சி. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**37—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***9351—திரு. சி. சிவசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் வட்டம், நெரிப்பரச்சல் ஊராட்சி, பாண்டியன் நகரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பாண்டியன் நகர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் நமது தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவை, பெரியார் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் ஒப்புதல் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோவை, பெரியார் மாவட்ட மக்களின் சார்பாகவும், அந்தப் பகுதிகளுக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் இந்த மன்றத்தில் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 28]

எனது கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதில் குறித்து, ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். கோவை தொழில் நகரமாகத் திகழ்கின்ற காரணத்தால், வருகின்ற காலகட்டத்தில் அந்தப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

தேசிய நெடுஞ்சாலை அமைந்திருக்கக்கூடிய பெருமாநல்லூரில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை நேற்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபடி, upgrade பண்ணுவதற்கு, உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்தக் கருதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியலில், பெருமாநல்லூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையமும் இடம் பெற்றிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு குறைந்தது 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டுமென்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு கேள்வியை நான் சென்ற சட்டசபைக் கூட்டத் தொடரின்போது கேட்டேன். 30,000 மக்கள் தொகை என்றிருப்பதை, 25,000-ஆக மாற்ற மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தமா என்று கேட்டதற்கு ஆவன செய்யப்படும் என்று முன்பு பதில் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதை மனதிலே வைத்துக்கொண்டு, தற்போது அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டுமென்கிற சூழ்நிலையிலே, 30,000 மக்கள் தொகை இருந்தால்தான் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்கலாம் என்ற நிலையை மாற்றி, 25,000 பேர் இருந்தாலும் ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைக்கலாம் என்பதற்கான இசைவினை மத்திய அரசிடம் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா? இதுவரை அப்படி ஏதாவது மத்திய அரசிடம் கேட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் இதே கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். மீண்டும் வலியுறுத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நடப்பு ஆண்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஹாஸ்பிட்டலாக தரம் உயர்த்துவதைப் போலவே. அதே மாதிரி திட்டத்தினை துணை சுகாதார நிலையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலேயிருந்து, அந்தந்தப் பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாக ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த இடம் இருக்குமேயானால், அங்கே நிதிநிலையைக் கருத்தில்கொண்டு ஆரம்பிக்கப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல. அந்த துணை சுகாதார நிலையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றம் செய்கிறபோது, இதே நிபந்தனைக்கு, இதே இலக்கிற்கு உட்பட்டு அந்தப் பகுதி இருக்குமேயானால், அந்த இடம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**38—**

**பேருந்து நிலையம்**

***2784—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கிருஷ்ணகிரி நகரத்தில் நிரந்தர பேருந்து நிலையம் இல்லாததால் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி நகராட்சி, கட்டிகானப்பள்ளி கிராமம் சர்வே எண் .42/1-ல் அமைந்துள்ள அப்புராவ் ஏரியில் 16.10 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கிருஷ்ணகிரி நகரம் வளர்ந்து வருகின்ற நகரமாகும். மாவட்ட அந்தஸ்திலே இருக்கின்ற அந்த நகரத்திலே உள்ள மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த அந்தப் பேருந்து நிலையம், இந்த ஆண்டு கிருஷ்ணகிரியிலே நிறுவப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலே அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, பணி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்திலே, கிருஷ்ணகிரி நகரத்திலே நிரந்தர பேருந்து நிலையம் அமைய ஆணையிட்ட, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பிற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு, பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் அமைக்க ரூ. 4.10 கோடி கடன் தொகையை அளிக்கக் கோரி, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. கடன் தொகை பெறப்பட்டவுடன், பேருந்து நிலையம் கட்ட நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. அ. நடராஜன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2002 மார்ச் 28

**39—**

**ஊராட்சியைப் பிரித்தல்**

***10994—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, கோமல் ஊராட்சியை கோமல், செம்பியன்கோமல், நச்சினார்குடி என் மூன்று ஊராட்சிகளாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது ஊராட்சிகளைப் பிரிக்கின்ற திட்டம் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தடைகளைத் தகர்த்து, தமிழகத்தை முனனோடி மாநிலமாக ஆக்கிட, மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள எங்கள் தாயை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்திலுள்ள கோமல் ஊராட்சி, 3 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கியதாகவும், 2 ஒன்றிய கவுன்சில்களைக் கொண்டதாகவும், சுமார் 8000 வாக்காளர்களைக் கொண்டதாகவும் மிகப் பெரிய சிற்றூராட்சியாகவும் இருக்கிறது. நிர்வாக வசதியைக் கருதி, அந்த ஊராட்சியை 3 சிற்றூராட்சிகளாகப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் உள்ளாட்சித் தேர்தல் நடந்த காரணத்தினால், தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களது பதவிக் காலம் 5 ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கப்படவேண்டும். எனவே, ஓர் ஊராட்சியைப் பிரிப்பதற்கு, தேர்தல் அறிவித்து, தேர்தல் முடிந்ததற்குப் பின்பு, பிரிப்பது நடைமுறை சாத்தியம் அல்ல. எனவே, உள்ளாட்சித் தேர்தல் வருகின்றபோது, அது சம்பந்தமாக அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில், கடந்த கால கலைஞருடைய ஆட்சி பெருமத்தூர் கிராமத்தை, பெருமத்தூர் ஊராட்சியாக அறிவித்தது. அதற்குப் பிறகு நடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் அந்த ஊராட்சி செயல்படுத்தவில்லை. மேலும், அந்த ஊராட்சி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போட்டால்தான் தெரியும். அமைச்சர் அவர்களிடம் இதற்கு பதில் இருக்காது. குத்தாலம் தொகுதி, கோமல் ஊராட்சி குறித்து பதில் இருக்கும். எனவே, தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 40, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**40—**

**சொட்டுநீர்ப் பாசனம்**

***6000—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத் துறையின் பரிந்துரையுடன் விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம் குறித்து துறையுடன் விவாதித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் கடந்த பத்தாண்டுகளாக சொட்டுநீர்ப் பாசன மானியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-30

**திரு. மா. ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையின் பரிந்துரையுடன் தரமான Tube உரிய கம்பெனி மூலமாகக் கிடைக்கப்பெற துறை முயற்சி எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய

[2002 மார்ச் 28

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்கள் உற்பத்தி செய்பவர்கள், ஐ.எஸ்.ஐ. தர நிர்ணயத்துடன்கூடிய குழாய்களைத் தயார் செய்து, இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் உரிமம் பெற்றிருப்பதன் அடிப்படையில், தலைமைப் பொறியாளர் அவர்களால் அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கிற 10 மாவட்டங்களில், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கும் இந்தச் சொட்டு நீர்ப்பாசனம் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி. இவ்வளவு சுருக்கமாகக் கேள்வி கேட்கிறீர்களே!

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தைப்பற்றிச் சிந்திக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மூலம் சொட்டுநீர்ப் பாசனத்திற்குக் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட மானியம் எவ்வளவு, பயன்பெற்ற விவசாயிகள் எத்தனைபேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 17.98 கோடி. இதுவரை 9 கோடி ரூபாய் அளவிற்குப் பயன்பெற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள், தங்களுடைய தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக சொட்டுநீர்ப் பாசனத்தை உபயோகப்படுத்துவதற்காக வேளாண்மைத் துறையை அணுகுகிறபோது, தனியார் துறையின் உதவியை நாடும்படி அறிவுறுத்தப்படுவதால், அந்த உதவியை, அரசாங்கம் தருகிற மானியத்தைப் பெறுவதில் மிகப் பெரும் சிக்கல் இருப்பதாக விவசாயப் பெருமக்களிடம் ஒரு கருத்து இருக்கிறது. எனவே, அந்த நடைமுறையை எளிமைப்படுத்தி நேரடியாக வேளாண்மைத் துறையிலிருந்து சொட்டுநீர்ப் பாசனத்திற்கான மானியத்தையும், உதவியையும் விவசாயிகள் பெறுவதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா;



2002 மார்ச் 28]

அத்துடன் தொடர்ந்து சொட்டுநீர்ப் பாசனம் பற்றியே பேசப்படுகிறது. தெளிப்புநீர்ப் பாசனம் எந்த அளவிலே நடைமுறைப்படுத்தப்படுகிறது? தெளிப்புநீர்ப் பாசன வசதியைப் பெறுவதற்கு வேளாண்மைத் துறை விவசாயிகளுக்கு என்ன வழிவகை அரசு வைத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனத்தின் மூலமாக தமிழக விவசாயிகள் பயன்பெறவேண்டும் என்கின்ற அடிப்படையில், மானியத்துடன் கூடிய உதவிகள் செய்யப்பட்டு வருவது மட்டுமல்ல; விவசாயிகள் இதை அறிந்து, இதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்கின்ற அடிப்படையில், பல்வேறு முகாம்களின் மூலமாக அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையையே விவசாயிகள் பெறுவதற்கு முன்வருவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தர நிர்ணயம் செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட யாரிடம் வேண்டுமென்றாலும் விவசாயிகள் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அதில் எந்தத் தடையும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனமானது, தற்போது பொறியியல் துறையின் மூலமாகவும், அதேபோல பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை வேளாண்மைத் துறையின் மூலமாகக் கொடுத்தால், அங்கு போதிய அளவு அதிகாரிகள் இருப்பதால் விவசாயிகள் உரிய இடத்திற்குச் சென்று, ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திற்கும் சென்று, அந்தப் பலனை அடையக்கூடிய வாய்ப்பு இருக்கும். இந்த சொட்டுநீர்ப் பாசனத்தை அந்த மாவட்ட சென்டரிலே, பொறியியல் துறை அல்லது பட்டு வளர்ச்சித் துறை உள்ள இடத்திற்குச் சென்று விவசாயிகள் பார்ப்பது என்பது சிரமமாக உள்ளது. அதை அரசு விவசாயத் துறையின் மூலமாகவே செய்தால், அந்த J.D., A.D.(A) மூலமாக அந்தத் திட்டத்தினுடைய பலனை அடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்கு அந்தத் துறை உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மேலும், எங்கள் பகுதி அதிக தென்னை மரங்கள் உள்ள பகுதியாக உள்ளது. உடுமலைப்பேட்டையிலே 50 ஆயிரம் ஏக்கரும், பொள்ளாச்சியிலே 75 ஆயிரம் ஏக்கரும் இப்போது தென்னை மரங்கள் உள்ளன. இப்போதுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டிலே, சொட்டுநீர்ப் பாசனம் சிறப்பான முறையிலே இருந்தால், நன்றாக இருக்கும். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 மார்ச் 28

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனம் வேளாண்மைத் துறையில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்தத் தாலுகாக்களிலே வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, வேளாண்மைத் துறை அதிகாரிகளிடம் தங்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க வேண்டுமென்று கேட்டால், அப்படிக் கேட்பதன் பேரில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்ல, தென்னை விவசாயிகளைப் பொறுத்த அளவில், குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இதற்காக 17.98 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டும், இதுவரையில் 9 கோடி ரூபாய் அளவிலேதான் பயன் பெற்றிருக்கிறார்கள். இதற்காக விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தியும், விவசாயிகள் இதற்கு முன்வரவில்லை. அப்படி வருகின்ற பட்சத்தில் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, யார் முன்வந்தாலும் அவர்களுக்கு உதவி செய்து கொடுக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், குறிப்பாக தென்னை விவசாயத்தை நம்பியிருக்கின்ற பகுதி. கோவை-பெரியார் மாவட்டத்திலேயிருந்து 3 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் அளவில் விவசாய நிலங்கள், பரம்பிக்குளம்-ஆழியாறு அணைத் திட்டத்தின் மூலம் நீர்ப்பாசனம் பெறுகின்றது. இந்த 3 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் நிலங்களையும் சொட்டுநீர்ப் பாசனம் பெறும் நிலமாக மாற்றியமைத்தால், இப்போது இரண்டு ஆண்டுகள், 4 1/2 மாதம், ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் தண்ணீர் வந்து புன்செய் விவசாயம் செய்கின்ற நிலை மாறி, ஆண்டு முழுவதும் அந்தப் பகுதியில் காய்ந்துகொண்டிருக்கிற தென்னை மரங்கள் நன்றாகச் செழித்து வளர்வதற்கான சூழ்நிலை ஏற்படும். அதற்கான திட்டம் முன்பு பரிசீலனையில் இருந்ததாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பேசப்பட்டது. இப்போது பரம்பிக்குளம்-ஆழியாறு பிரதான வாய்க்காலிலிருந்து மின் மோட்டார்கள் மூலமாக தண்ணீர், பம்பு செய்யப்பட்டு, சொட்டுநீர்ப்பாசனம் மூலம் தென்னை விவசாயம் முழுவதுமாக பயன்படக்கூடிய வகையிலே மீண்டும் அத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.



2002 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு நிதி அதிகமாக இருக்கிறது; மக்கள் கேட்கவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் அந்த நிதியை அந்த விவசாய மக்களுக்குத் தருவதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு விவசாயிகள், ஆதிதிராவிடர்கள், பெண்கள் இவர்களுக்கு 50 சதவிகித மானியத்திலே கருவிகள் வழங்கப்படுகின்றன. மற்ற விவசாயிகளுக்கு 30-35 சதவிகித மானியத்திலே வழங்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் முன்வந்தால், எந்த அளவிலே முன்வந்தாலும், உறுப்பினர் எத்தனை பேர்களைச் சொல்கிறார்களோ, அத்தனை பேர்களுக்கும் தருவதற்குத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை விவசாயிகள், தேங்காய் விலை வீழ்ச்சியால் சிரமப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே அவர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனத்திற்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை அதிகரித்து, விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனத்தை அதிக அளவிலே உபயோகப்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சொட்டுநீர்ப் பாசனத்திற்காக மானியமாகத் தருவது என்பது மத்திய-மாநில அரசுகளால் இணைந்து தரப்படுவது. இதற்கு மேல் தர இயலாது என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி சுமார் 18 கோடி ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அதிலே செலவு செய்யப்பட்டிருப்பது 9 கோடி ரூபாயாக மட்டுமே இருக்கிறது. ஆனால், மானியங்கள் கணிசமான அளவிற்கு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில் சரிபாதி தொகையை விவசாயிகள் பயன்படுத்தவில்லை என்று

தெரிகிறதே! அப்படியானால் அதற்குச் சொல்லப்படுகின்ற காரணங்களோ, அல்லது விதிமுறைகளோ கடினமாக இருக்கின்றனவா அல்லது வேறு மாவட்ட வாரியாக இருக்கிற நிலைமைகளின் காரணமாக இருக்கின்றனவா அதிலே என்ன தடையிருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எந்தத் தடையுமில்லை, கஷ்டமும் இல்லை. விவசாயிகள் அதிகமாக முன்வரவில்லை. இப்போது முன்வந்திருக்கின்றதே மிக அதிகம். ஆகவே, அதிகமாக வருகிறபோது இருக்கின்ற நிதித் தொகை அளவிற்குச் செயல்படுத்தப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 10-40*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டுநீர்ப் பாசனம் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகின்றதா? அப்படி இல்லாது ஒவ்வோராண்டும் சில மாவட்டங்களில் சுழற்சி முறையிலே எடுத்துக்கொண்டு செயல்படுத்துகிறார்களா? அப்படிப் பயன்படுத்துகின்ற விவசாயிகளுக்கு உச்சபட்சமாக, அரசு எவ்வளவு மானியத் தொகை வழங்குகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எந்த சுழற்சி முறையும் இல்லை. தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லாப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, 4 ஹெக்டேர் நிலத்திற்கு வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக, 4 ஹெக்டேர்வரை வழங்கப்படுகிறது. அதற்குரிய மானியமாக ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல, 50 சதவிகிதம், 35 சதவிகிதம் என்கின்ற அளவிலே உதவி வழங்கப்படுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 3. அறிவிப்புகள்

### (அ) மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு ஆளுநர் மகிழ்ச்சி தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து, 20-3-2002 ஆம் நாளிடப்பட்ட கடிதத்தில், கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:—

"I am happy to acknowledge receipt of the Resolution adopted by the Assembly on 15th March, 2002 thanking me for my address delivered on 9th March, 2002 to the Members of the Tamil Nadu Legislative Assembly."

## 4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2001-2002, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்து, இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு 978.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் 376.86 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான 601.34 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தியது, வாக்காளர் பட்டியல்கள், வாக்குச் சீட்டுகள், புகைப்பட அடையாள அட்டைகள் ஆகியவற்றை அச்சிட்டது தொடர்பான செலவுகளுக்கு "மானியக் கோரிக்கை 8 - தேர்தல்கள்" என்பதன்கீழ் கூடுதலாக 22.80 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகின்றது.

[திரு. சி. பொன்னையன்] [2002 மார்ச் 28

4. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் நிவாரணம் அளிக்கவும், சீரமைப்புப் பணிகளுக்காகவும் 49 கோடி ரூபாய் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. ஓய்வூதியதாரர்கள் நல நிதிக்கும், அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப நல நிதிக்கும் ஒட்டுமொத்த மானியமாக முறையே 2 கோடி ரூபாய் மற்றும் 5 கோடி ரூபாய் அரசு அனுமதித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட இத்தொகைகளுக்கும், ஓய்வூதியச் செலவுகளுக்குமான நிதி ஒதுக்கத்திலுள்ள பற்றாக்குறையை ஈடு செய்யவும் "மானியக் கோரிக்கை 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் கூடுதலாக 16.98 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது.

6. அரசு போக்குவரத்து நிறுவனங்களின் கடன்-பங்கு விகிதாச்சாரத்தை மேம்படுத்த, இப்போக்குவரத்து நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய கடன் நிலுவைத் தொகையான 147.84 கோடி ரூபாய் பங்குத் தொகையாக மாற்றப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை 57 - சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. அரசு வாங்கிய பல்வேறு கடன்கள் மீது வட்டிக்கான கூடுதல் செலவினங்களுக்காக "கடன் செலவுகள்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் 261.41 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

8. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அவ்வப்போது பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப்பற்றைத் திருப்பிச் செலுத்துவதற்காக "பொதுக் கடன் - திருப்பிச் செலுத்துதல்" என்பதன் கீழ் 448.32 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

9. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம்பெற்றுள்ளன.



2002 மார்ச் 28] [திரு. சி. பொன்னையன்]

10. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

**2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—** | |
| 1. நில வருவாய்த் துறை | 1 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 2 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 4 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 1 |
| 6. ஆவணப் பதிவு | 4 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 3 |
| 8. தேர்தல்கள் | 22,80,12 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 34 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 1 |
| 11. மாவட்ட நிருவாகம் | 18 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1 |
| 13. நீதி நிருவாகம் | 12 |
| 14. சிறைச்சாலைகள் | 11 |
| 15. காவல் துறை | 86 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 3 |

[திரு. சி. பொன்னையன்] [2002 மார்ச் 28

| கோரிக்கை (1) | | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | | |
| 17. | கல்வி | 50 |
| 18. | மருத்துவம் | 38 |
| 19. | மக்கள் நல்வாழ்வு | 41 |
| 20. | வேளாண்மை | 40 |
| 21. | மீனளம் | 84,83 |
| 22. | கால்நடை வளர்ப்பு | 7 |
| 23. | கூட்டுறவு | 2 |
| 24. | தொழில்கள் | 1,04,28 |
| 25. | கைத்தறியும் துணித் தொழிலும் | 34,34 |
| 27. | ஊரக வளர்ச்சி | 21 |
| 28. | தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 8 |
| 29. | சமூக நலன் | 35 |
| 30. | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 19 |
| 31. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 12 |
| 32. | வீட்டு வசதி | 3 |
| 33. | நகர்ப்பகுதி வளர்ச்சி | 1 |
| 34. | நுகர் பொருள் வழங்கல் | 4 |
| 35. | பாசனம் | 5 |
| 36. | பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 6 |
| 37. | சுற்றுச்சூழல் | 79,93 |
| 38. | சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 12 |



2002 மார்ச் 28] [திரு. சி. பொன்னையன்]

| கோரிக்கை (1) | | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | | |
| 39. | சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 1 |
| 40. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 46,49,52 |
| 41. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 16,97,56 |
| 42. | பல்வகை | 23,76,60 |
| 43. | எழுதுபொருள்-அச்சுத் துறை | 3 |
| 44. | காட்டுவளத் துறை | 12 |
| 45. | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1 |
| 46. | செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் | 2 |
| 47. | ஊரகத் தொழில்கள் | 5 |
| 48. | குடிநீர் வழங்கல் | 2 |
| 49. | நகராட்சி நிருவாகம் | 5 |
| 50. | சுற்றுலா | 9 |
| 51. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 6 |
| | **மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **1,13,12,49** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—** | | |
| 52. | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 1,46,04 |
| 54. | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 21 |
| 55. | பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 6 |
| 56. | சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 5 |

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
| --- | --- |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி** | |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 1,51,53,72 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 6 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 1,72 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 20 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **1,53,02,06** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—** | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 22 |
| பெருமொத்தம் | **2,66,14,77** |

## 5. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-1991, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990-91 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச்





செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகின்றேன்.

பொதுக் கணக்குக் குழு, 1990-91 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகையான செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1990-91 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டப்பேரவைமுன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது. அவ்வாறே, 1990-91 ஆம் ஆண்டு மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. இம் மிகைச் செலவு மொத்தம் 269.66 கோடி ரூபாயாகும். மேற்சொன்ன ஆண்டில் "கல்வி", "கூட்டுறவு", "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்", "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" ஆகியவற்றின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்குச் சம்பளம் மற்றும் படிகள் திருத்தியமைக்கப்பட்டதாலும் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில், ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரையின் பேரில் சம்பள நிலுவைகளைப் பெற்றுத் தந்ததாலும், வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் நிலுவைகளைச் சேர்த்ததாலும், கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானிய சம்பளவீதம் அளித்ததாலும் "கல்வி" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்டதாலும், ஓய்வூதியத்தில் ஒரு பகுதி மொத்தமாக்கப்பட்டதாலும், ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உயர்வீதத்தில் அகவிலைப்படி அளித்ததாலும் "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

சில கழகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் வழிவகை முன்பணங்கள் அனுமதிக்கப்பட்டதால், "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2002 மார்ச் 28

1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டி அமர்கிறேன்.

**நிறைவேற்றப்பெற்ற 1990-1991 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | ரூபாய் |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 16,15,323 |
| 3. மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 4,47,508 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 27,70,330 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 8,28,899 |
| 14. சிறைச்சாலைகள் | 20,93,286 |
| 17. கல்வி | 126,15,38,219 |
| 23. கூட்டுறவு | 26,86,61,159 |
| 29. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 38,89,714 |
| 30. சமூக நலன் | 7,25,41,583 |
| 31. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 1,25,66,380 |
| 37. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 4,81,80,238 |
| 38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | 1,09,17,242 |
| 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1,31,21,178 |
| 42. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 26,05,72,463 |



2002 மார்ச் 28] [திரு. சி. பொன்னையன்]

| கோரிக்கை | ரூபாய் |
|---|---|
| 45. காட்டுவளத் துறை | 1,36,92,960 |
| 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 14,02,398 |
| **மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **197,48,38,880** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—** | |
| 50. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 8,36,580 |
| 53. பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 19,54,942 |
| 54. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 2,42,24,989 |
| 55. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 15,50,801 |
| **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு** | **2,85,67,312** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—** | |
| 59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 68,95,43,025 |
| **பெருமொத்தம்** | **269,29,49,217** |

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002-2003 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206, read with Clause 3 of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the financial year 2002-2003."

## 6. முன்பண மானியக் கோரிக்கைகள், 2002-2003, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-2003 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-3-2002 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை, 2002-2003 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



### நிறைவேற்றப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 2,95,65 | .. |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2,28,85 | .. |
| 3. | நீதி நிருவாகம் | 34,72,58 | .. |
| 4. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 88,59,58 | 2,83,97 |
| 5. | வேளாண்மைத் துறை | 1,49,94,21 | 92,47 |
| 6. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு | 41,90,14 | 1 |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் | 10,08,91 | 56,31 |
| 8. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் | 3,46,98 | - |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 30,83,48 | 33,85 |
| 10. | வணிக வரித் துறை—வணிக வரிகள் | 60,04,78 | - |
| 11. | வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 19,55,05 | - |
| 12. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 6,42,71,54 | 2,66,06 |
| 13. | எரிசக்தித் துறை | 5,82,63,52 | 50,00,00 |
| 14. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 24,22,09 | 24,42,05 |
| 15. | நிதித் துறை | 1,14,66,29 | 5,48,43 |

[2002 மார்ச் 28

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 16. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல் | 22,44,48 | |
| 17. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 14,17,69 | -- |
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 3,10,94,78 | 5,06,50 |
| 19. உயர்கல்வித் துறை | 1,98,19,14 | 14,71 |
| 20. நெடுஞ்சாலைகள் துறை | 1,07,01,34 | 1,79,77,07 |
| 21. உள் துறை—காவல் | 2,92,58,05 | 41,92,29 |
| 22. உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 14,72,12 | 1,32,32 |
| 23. உள் துறை—சிறைச்சாலைகள் | 14,81,88 | 83,84 |
| 24. உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 11,35,98 | -- |
| 25. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 27,14,73 | 45,49,29 |
| 26. தொழில் துறை | 9,94,61 | 11,96,49 |
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | 6,61,49 | 12,50 |
| 28. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா | 7,99,27 | 16,77 |
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு | 14,80,68 | 2 |
| 30. தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2,56,29 | -- |
| 31. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | 44,42,32 | 6,06 |
| 32. சட்டத் துறை | 2,11,95 | -- |



2002 மார்ச் 28]

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 33. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 2,65,71,57 | 2,31,06,29 |
| 34. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5,48,38 | .. |
| 35. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 7,97,21 | 1,42,42 |
| 36. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 6,36,21 | .. |
| 37. பொதுத் துறை | 19,89,35 | .. |
| 38. பொதுப் பணித் துறை | 1,28,63,06 | 97,48,32 |
| 39. வருவாய்த் துறை | 2,06,59,82 | 6,25,01 |
| 40. ஊரக வளர்ச்சித் துறை | 4,26,31,98 | 9,50,18 |
| 41. பள்ளிக் கல்வித் துறை | 10,40,16,29 | 1,31,91 |
| 42. சிறுதொழில்கள் துறை | 11,10,60 | 13,04 |
| 43. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 1,02,77,88 | .. |
| 44. தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி பண்பாடு | 10,41,07 | .. |
| 45. தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 6,83,19 | 12,36 |
| 46. போக்குவரத்துத் துறை | 37,68,73 | 30 |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 6,53,48 | .. |
| 48. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 7,97,84,23 | .. |
| 49. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 28,66,95 | .. |
| பெருமொத்தம் | **60,19,50,45** | **7,21,40,85** |

## 3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*



## 3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஈ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001-2002 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the financial year 2001-2002".

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2001-2002 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28-3-2002 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## நிறைவேற்றப்பட்ட 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—** | |
| 1. நில வருவாய்த் துறை | 1 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 2 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 4 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் | 1 |
| 6. ஆவணப் பதிவு | 4 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 3 |
| 8. தேர்தல்கள் | 22,80,12 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 34 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 1 |
| 11. மாவட்ட நிருவாகம் | 18 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1 |
| 13. நீதி நிருவாகம் | 12 |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு**—தொடர்ச்சி | |
| 14. சிறைச்சாலைகள் | 11 |
| 15. காவல்துறை | 86 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 3 |
| 17. கல்வி | 50 |
| 18. மருத்துவம் | 38 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 41 |
| 20. வேளாண்மை | 40 |
| 21. மீனளம் | 84,83 |
| 22. கால்நடை வளர்ப்பு | 7 |
| 23. கூட்டுறவு | 2 |
| 24. தொழில்கள் | 1,04,28 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 34,34 |
| 27. ஊரக வளர்ச்சி | 21 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 8 |
| 29. சமூக நலன் | 35 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 19 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 12 |
| 32. வீட்டுவசதி | 3 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 1 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 4 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு**—தொடர்ச்சி. | |
| 35. பாசனம் | 5 |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 6 |
| 37. சுற்றுச்சூழல் | 79,93 |
| 38. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 12 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 1 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 46,49,52 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 16,97,56 |
| 42. பல்வகை | 23,76,60 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 3 |
| 44. காட்டுவளத் துறை | 12 |
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1 |
| 46. செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் | 2 |
| 47. ஊரகத் தொழில்கள் | 5 |
| 48. குடிநீர் வழங்கல் | 2 |
| 49. நகராட்சி நிருவாகம் | 5 |
| 50. சுற்றுலா | 9 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 6 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | 1,13,12,49 |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**— | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 1,46,04 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 21 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 6 |
| 56. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 5 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 1,51,53,72 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 6 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 1,72 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 20 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 1,53,02,06 |
| **கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**— | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 22 |
| பெருமொத்தம் .. | 2,66,14,77 |

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்[illegible] அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் [illegible] அவர்கள் தமது [illegible] தெரிவித்துள்ளார்கள்.

223758
சென்[illegible]-600 008

[2002 மார்ச் 28

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானம்

### விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். இன்று அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



2002 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்கெடுப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2002) மற்றும் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2002) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்கெடுப்பு) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்கெடுப்பு) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2002) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்கெடுப்பு) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2002) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2002 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 மார்ச் 28] [திரு. சி. பொன்னையன்]

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2002) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2002) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2002 மார்ச் 28

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (1-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

53. சென்னை-2, அண்ணா சாலை, ரஹேஜா டவரிலுள்ள சீரமைப்பு மேம்பாட்டு பன்னாட்டு வங்கியின் உத்தேச அலுவலக வளாகத்தில் (உலக வங்கி) உள் அலங்கார அமைப்புப் பணியை திருவாளர்கள் சி.பி. ரிச்சர்ட் எல்லிஸ் நிறுவனத்திற்கு செய்யப்பட்ட இந்த அறிவிக்கையுடன் இணைக்கப்பட்ட I மற்றும் II விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்ட மின் பொருட்கள் மற்றும் மின் இணைப்புப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைமீது 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின், 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு மற்றும் 3-B பிரிவின்கீழ், வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 24-9-2001 ஆம் நாளிட்ட 81ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

54. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையின் பகுதி-C-யின் 45-வது இனத்தில் (1) துணை இனத்தில் குறிப்பிடப்பட்ட தேயிலையை குன்னூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஏலம் விடும் மையங்களில் விற்பனை செய்யும்போது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரை, வரி

[2002 மார்ச் 28

வீதத்தை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 31-12-2001 ஆம் நாளிட்ட 126 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

55. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு போதை மருந்து விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 26-12-2000 ஆம் நாளிட்ட 243ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1985 ஆம் ஆண்டு போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 61/1985) 78 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

56. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள்துறையின் 18-5-1999 ஆம் நாளிட்ட 678 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IX/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

57. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A-பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

58. 2000-20001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் - காகித நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

59. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

60. 2000-2001 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



2002 மார்ச் 28]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

32. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) 8ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் வணிக வரித் துறையின் 2-6-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/வ.வ./45(b-3)/2000 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 31-12-2001 ஆம் நாளிட்ட 126 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

33. 2002-2003 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

34. 2002-2003 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை.

35. 2002-2003 ஆம் ஆண்டு நிதி நிலைக் குறிப்பு - பகுதி-I

36. 2002-2003 ஆம் ஆண்டு நிதி நிலைக் குறிப்பு - பகுதி-II

37. 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள்.

38. 2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

39. 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (தமிழ், ஆங்கிலம்)

40. 2002-2003 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

41. 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

42. 2002-2003 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி (தமிழ், ஆங்கிலம்)

43. 2002-2003 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 223758 சென்னை-600 008

V 21, 31' P02
P02 . 16 . 2

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.